பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை: 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 15] சென்னை: கார்த்திகை 18உ (4 12—67) திங்கள் வெளியூர்: கார்த்திகை 19உ (5—12—67) செவ்வாய் [இதழ்: 143

வருக--காமராசர்!

இடையில் நான்கு ஆண்டுகள் எப்படி எப்படியோ ஓடிவிட்டன!

காமராசர் மீண்டும் தமிழகத்துக்கு வருகிறார் நாளைப் பிற்பகல்!

அவர் போகும்போது இருந்த தமிழகம் இப்போது இல்லை!

அவர் போனவுடன் இருந்த புதுடில்லியும் இப்போது இல்லை!

முதலமைச்சராக இருந்து கட்சித் தலைவராகச் சென்றவர், சாதாரண மனிதராகத் திரும்பி வருவதைப் போலவே—

★ **தமிழகத்தில் இப்போது, காங்கிரசுக் கட்சி ஆட்சியில் இல்லை!**

★ **'புதுடில்லி'யும் இப்போது இந்தியா முழுவதையும் தனது கட்சி நிர்வாகத்தில் கொண்டிருக்கவில்லை!**

நிலைமைகள் மட்டுமல்ல—மனிதர்களும் மாறிவிட்டார்கள்! மறைந்திருக்கிறார்கள்!

அவரைப் புதுடில்லிக்கு அழைத்துக்கொண்ட நேரு பண்டிதர் இப்போது இல்லை!

அடுத்து, காமராசர் தேர்ந்தெடுத்த சாஸ்திரியும், காலமாகிவிட்டார்!

அவர் பார்த்து தலைமையமைச்சராக ஆக்கிய இந்திராவோ, எவ்வளவோ மாறிவிட்டார்!

போன பெருமையுடன் திரும்பி வர முடியவில்லை! இருந்த இடத்துக்கு—தமக்கு விருப்பப்படி—ஒரு வாரிசை வைத்துவிட்டு வர முடியவில்லை! மனம் புண்படும்தான்! ஆனால், நிலைமை என்னவோ அப்படியல்லவா மாறிவிட்டிருக்கிறது!

"முதன்முறையாகக் காங்கிரசு, முறையான சரிவைப் பெற்றது — அதோ, அவர் கட்சித் தலைவராக இருந்த போதுதான்" என்று ஆள் காட்டி விரல் அசைவுக்குப் பொருளாகித் தீரவேண்டிய துர்ப்பாக்கியநிலையைத்தான், அரசியல்அறுவடையாகச் சுமந்துகொண்டு பிறந்தகம் திரும்புகிறார், காமராசர்!

வரலாற்று ஆசிரியர்களின் மொழியில் குறிப்பிடுவதென்றால், காமராசரின் கட்சித் தலைமைக் காலம், 'சம்பவங்கள்' நிறைந்த நாட்களாகும்!

அந்நிய ஆக்கிரமிப்பு—அடுத்தடுத்து இரு தலைமையமைச்சர்கள் மறைவு—ஒரு பொதுத்தேர்தல்—பல இடைத் தேர்தல்கள்—மாநிலங்களில் காங்கிரசின் தோல்வி—மாநிலக் காங்கிரசுகளில் குழப்பம், போட்டி—வேலைநிறுத்தங்கள்—வகுப்புவாதக் கலவரங்கள்—இப்படி இந்த நான்கு ஆண்டுகளில் காமராசர், ஒரு அனைத்திந்தியக் கட்சியின் தலைவராக இருந்து சந்திக்கவேண்டி இருந்தவைகள், ஏராளம் நடைபெற்றிருக்கின்றன!

கட்சித் தலைமைப் பதவிக்குக் காமராசர், 'ஒரு புது மெருகினைக் கொடுத்தார்' என்பது உண்மைதான்; ஆனால் அது, 'காலத்தால் மறையக்கூடியது; நீடித்து நிலைக்கக்கூடியதல்ல' என்பதனை, அவர் கண் முன்னாலேயே — அவர் தேடிக்கொண்ட பெருமைகள் மறைந்துகொண்டிருப்பது புலப்படுத்துகின்றன!

காமராசர் எவ்வளவு தூரம் வெறுக்கப்பட்டு—ஒதுக்கப்பட்டு—பதவிக் காலத்தை முடித்துக்கொண்டு திரும்புகிறார் என்பது ஒன்றே, அவர் பதவியில் இருந்தபோது தேடிக்கொண்ட பெருமைகள் – திறமைகளின் அடிப்படையில் அல்ல—சந்தர்ப்பவசத்தால் — அரசியல் சாதுரியப் போக்கினால் என்பதனைக் காட்டுவதாக இருக்கிறது!

"இரு தலைமையமைச்சர்களைத் தேர்ந்தெடுத்த முறைதான், அவரது அரசியல் சாதனைகளுக்கே மகுடம் போன்றவை" என்று பெருமை பேசும் வாய்கள், மூன்றாவதாக அவர் தனக்கென்று ஒரு வாரிசைத் தேர்ந்தெடுக்கும் பிரச்சினையில் பரிதாபப்படக்கூடிய வகையில் புறக்கணிக்கப்பட்டிருக்கிறாரே என்பதைப் பார்த்து எதுவும் சொல்லமுடியாமல் தேம்பி நிற்கின்றன!

'போய் வருகிறேன்' என்று குதூகலத்துடன் சொல்லிக்கொண்டு வரவேண்டியவர், கொதிப்புடன் திரும்புகிறார்!

'சென்று வாருங்கள்' என்று நன்றியுணர்வுடன் விடைகொடுக்க வேண்டியவர்கள்—வெளிப்படையாக எதிர் முகாம் அமைத்து—அவரை, புறமுதுகிட்டுத் திரும்ப வைத்திருக்கிறார்கள்!

இந்தப் பின்னணியில், கட்சித் தலைவராக—கடைசி முறையாக—காமராசர், நாளை தமிழகம் திரும்புகிறார்!

இனி அடுத்து ஒருமுறை அவர் புதுடில்லிக்குப் போக இருப்பது, பொறுப்புக்களை முறையாக ஒப்படைக்க!

அதற்குப்பின் திரும்ப இருப்பது, காங்கிரசின் முன்னாள் தலைவராக!

எனவே, நாளை அவர் வருவது, நான்காண்டுகளுக்கு முன்னர் ஓர் நாள் அவர், முதன் முதலாகத் தலைவராகப் பதவியேற்கப் புதுடில்லிக்குச் சென்றதைப் போல் முக்கியத்துவம் வாய்ந்த நாள் ஆகும்.

அவர் சென்னை திரும்புவதற்குள், 'தமிழகக் காங்கிரசுக்கு சி. சுப்பிரமணியம் பொறுப்பேற்க இருக்கிறார்' என்ற செய்தி பரவிவிட்டிருக்கிறது!

'நிஜலிங்கப்பா'போல் இதுவும் ஒரு 'ஏற்பாடு'தான் என்பதனைக் காமராசர் இந்த நேரத்தில் அறிந்துகொள்வது, நொந்திருக்கும் அவரது உள்ளத்தை மேலும் நோகச் செய்யும்!

பிணிவாய்ப்பட்டு படுக்கையில் வீழ்ந்துவிட்டவனிடம், கட்டாயப்படுத்தி 'சாசனம்' எழுதி வாங்கிவிடுவதுபோல், புதுடில்லி நிலைமைகளினால் பாதிக்கப்பட்டிருந்தவேளையில், 'சுப்பிரமணியம்தான்; என்ன சொல்கிறீர்கள்?' என்று கேட்டு, 'ஆமாம்; அவரேதான் இருந்துவிடட்டுமே' என்று சொல்லவும் வைக்கப்பட்டிருக்கிறார் காமராசர்!

அவரது 'தலைமறை'வில்தான், தமிழகத்துக் காங்கிரசுக்கும் தலைவர் தயாராகி இருக்கிறார்!

இந்த நிலையில், 'கழகத்தின் வசம் கிட்டியிருக்கும் தமிழகத்து நிர்வாகப் பொறுப்புக்களைத் திரும்பவும் காங்கிரசுக்கு மீட்டுத் தரக் காமராசர் பாடுபடப்போகிறார்' என்ற வீணான யூகங்களை எழுதி—பேசி, அவரை இன்னும் பரிதாபத்துக்குரியவராக்குகிறார்கள்—சில பத்திரிகையாளர்கள்!

காமராசர், தனக்குத் தனிப்பட்டவகையில் ஏற்பட்டுவிட்ட திடீர்த் திருப்பங்களைச் சரிசெய்துகொள்ளவே கணிசமான காலம் தேவை!

இந்த வேளையில், கழகத்துக்குக் கிட்டியிருக்கும் செல்வாக்கைக் குறைக்கத் திட்டமிடுவாரானால், பின்னர், அவரை அரசியல் உலகில்—'காணவில்லை' என்ற விளம்பரத்தில்தான் சேர்க்க வரும்!

இனி காமராசருக்குப் போதிய அவகாசம் இருக்குமென்பதால், அவருக்கு ஒரே ஒரு விருப்பத்தை மட்டும் சொல்லிவைப்போம்.

அமைதியாக அமர்ந்து காமராசர், கடந்த ஐந்து அல்லது ஆறு ஆண்டுக்கால நடப்புக்களை மீண்டும் மனக்கண்ணால் பார்த்தால், பின்வரும் ஒரு மொத்த உண்மை அவருக்குப் புலப்பட்டே தீரும்!

அண்ணாவின் செல்வாக்கைக்
குறைக்கவேண்டும்—
கழகத்தின் வளர்ச்சியைத்
தடுக்கவேண்டும்

என்ற இரண்டு தீய நோக்கங்கள்தான், அவரது இன்றைய அரசியல் சரிவுகளுக்கு அடிப்படைக் காரணங்கள்!

அவரது இரண்டு திட்டங்களும், அவருக்குத் தற்காலிக வெற்றியைக் கொடுத்தது உண்மைதான்!

ஆனால், அவையே இப்போது அவருக்கு நிரந்தரத் தோல்வியைக் கொடுத்திருக்கின்றன!

கழகத்தின் அழிவில் அவர், தன்னை வளர்த்துக்கொள்ள விரும்பினார்!

தனி மனிதர்கள் வாழ்க்கையில் இந்தக் கோட்பாடு, வேண்டிய பயனைக் கொடுக்கலாம்!

ஆனால், அரசியலில் இது தவறான தத்துவம்!

கழகத்தின் இன்றைய வளர்ச்சியைக் காமராசர் உற்றுக் கவனித்தாலே அவருக்கு இந்த உண்மை புலப்படும்!

பதவி ஏதும் இல்லையென்றாலும், தனிப்பட்ட வகையில் செல்வாக்கு இருக்கிறதென்றால் காமராசர்

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க)

ஆயா ராம்--கயா ராம் ஆகியோர் பற்றி இராசாராம்!

"கம்பெனிகள் அரசியல் கட்சிகளுக்கு வழங்கும் நன்கொடைகள் பற்றிய மக்களவை விவாதத்தில், 'ஆயா ராம்' — 'கயா ராம்' என்ற பெயர்களை, ஓசைநயம் ஒத்துவரும் வகையில், கழக உறுப்பினர் இராசாராம் குறிப்பிட்டார்"

என்று 'டைம்ஸ் ஆப் இந்தியா' இதழ் செய்தி தந்துள்ளது.

கட்சி விட்டுக் கட்சி மாறுபவர்களுக்கு ரூ. 20,000 என்றும் —ரூ. 40,000 என்றும் வடக்கு மாநிலங்களில் கையூட்டு வழங்கப்படுகிறது!

உள்துறை அமைச்சர் சவாண், அத்தகைய ஆயா ராம்—கயா ராம் பற்றிச் சில நாட்களுக்குமுன் மக்களவையில் குறிப்பிட்டார்.

காதில் விழுந்தது!

"டேராடூன் செதியைப் படித்தாயா?"

"கருத்தடை செய்துகொள்ளும் தம்பதிகளுக்கு அதிக அளவு சர்க்கரை கோட்டா கொடுக்கிறார்களாமே — அதனைத்தானே சொல்கிறாய்?"

"ஆமாம்; காலம் எப்படிப் போகிறது பார்! 'குழந்தை பிறந்தது' என்பதற்கு இனிப்புக் கொடுத்து அறிவிப்பது இன்றும் இருந்துவரும் ஒரு பழக்கமாகும்; ஆனால், அதிக அளவு சர்க்கரை 'கோட்டா' கொடுத்தாலே கருத்தடை செய்துகொள்ளும் போக்கு வந்துவிட்டது! மழலைச் செல்வம் மதிப்பிழந்துபோனது ஒருபுறமிருக்கட்டும் — சர்க்கரைக்கு வந்த மதிப்பைப் பார்!"

பதிவேடு

மோட்டார் விபத்து--
ஒரு புள்ளிவிவரம்

ஒவ்வொரு பத்தாயிரம் கார்களுக்கும் இந்தியா மற்றும் சில நாடுகளில் உயிரிழப்பைக் கொடுக்கும் சாலை விபத்துக்கள் பற்றிய ஒரு புள்ளிவிவரம் கீழே தரப்படுகிறது:—

நாடு	எண்ணிக்கை
இந்தியா	80
இங்கிலாந்து	10
பிரான்சு	10
இத்தாலி	10
அமெரிக்கா	5

அதிகாரவர்க்கத்தின் நெடிய வளர்ச்சி!

இந்தியாவில் அரசு ஊழியர்கள் அறுபது இலட்சம் பேர்!

"மத்திய—மாநில அரசுகளில் பணியாற்றிவரும் ஊழியர்களின் எண்ணிக்கை சுமார் 60 இலட்சமாகும்"

என்று கல்கத்தா இதழான 'ஸ்டேட்ஸ்மன்' தகவல் தந்திருக்கிறது.

இதில் சுமார் 25 இலட்சம் ஊழியர்கள் மத்திய அரசில் அலுவல் பார்ப்பவர்கள் என்றும், எஞ்சிய 35 இலட்சம் பேர் மாநில அரசுகளில் இருப்பவர்கள் என்றும் கூறப்படுகிறது.

பொதுவாக இந்தியாவில், அரசினர் அலுவலகங்களில் அலுவல் பார்க்கும் ஊழியர்களின் எண்ணிக்கை ஆண்டொன்றுக்கு ஆறு சதவிகிதம் உயர்ந்துகொண்டே செல்கிறதாம்!

மத்திய அரசில் மட்டும் ஆண்டு ஒன்றுக்கு 1,00,000 புதிய வேலை வாய்ப்புக்கள் உற்பத்தி செய்யப்படுகின்றனவாம்!

முறையான ஒத்துழைப்பைத் தமிழகத்தில்தான் பெறுகிறார் இந்திரா

மாநில அரசுகள் கலைப்புகளினால் மடிவது சனநாயகம்தான்!

'அனுசரித்துப் போகும் தன்மை புதுடில்லிக்கு வேண்டும்' --- இந்திய அரசியல் குறித்து இலண்டன் 'டைம்ஸ்'

"கல்கத்தாவில் அண்மையில் நடந்த கலவரங்களின் விளைவாகப் பாதிக்கப்பட்டிருப்பது சனநாயகம்தான்!

"'காங்கிரசல்லாத நிர்வாகங்களுடன் இந்திரா ஒத்துப்போகிறார்' என்ற பெயருக்குக் களங்கம் ஏற்படுத்தும் வகையில்தான் அண்மையில் சில மாநில அரசுகள் கவிழ்க்கப்பட்டிருக்கின்றன!

"காங்கிரசல்லாத நிர்வாகம் நடைபெறும் தமிழகம், கேரளம் ஆகிய மாநில அரசுகளுடன்தான், இந்திரா, பொருந்திவரக்கூடிய ஒத்துழைப்பைக் காட்டுகிறார்—பெறுகிறார்!

"மற்ற காங்கிரசல்லாத மாநிலங்களுடன் அனுசரித்துப் போகும் தன்மையைப் புதுடில்லி கடைபிடிப்பதில்லை!"

என்று பிரபல இலண்டன் ஏடு 'டைம்ஸ்' எழுதியிருக்கிறது.

காங்கிரசு ஆட்சியில் மூடிய ஆலைகள் கழக ஆட்சியில் திறக்கப்படுகின்றன

வேளாண்மைக்கே முதலிடம் என்றாலும் புதிய தொழில்களிலும் அக்கறை காட்டுகிறோம்

'பார்த்து மகிழப் பத்திரிகைச் செய்திகள் பயன்படட்டும்'--- எதிர்க் கட்சியினர் குற்றச்சாட்டுக்களுக்கு அறிஞர் அண்ணா பதில்

தமிழகச் சட்டமன்றத்தில் மின்வாரியத்தின் நிதி நிலை அறிக்கை மீது நடைபெற்ற விவாதத்தின்போது எதிர்க் கட்சியினர் கூறிய சில குற்றச்சாட்டுக்களுக்குப் பதிலளிக்கும் வகையில், முதலமைச்சர் அண்ணா அவர்கள் தந்த விளக்கமாவது :—

எதிர்க் கட்சித் தலைவர், ஒரு தொடர்போடு பேசுகையில், 'மின்சார உற்பத்திக்குக் காரணம் யார்—மின்சார வளர்ச்சிக்குக் காரணம் யார்—நாங்கள் அல்லவா?' என்று சொன்னார்கள்.

இலண்டனில் வெள்ளைக்காரர்கள் இன்றுகூட, 'நாங்கள் அல்லவா முதன்முதலில் மின்சாரத்தைக் காட்டினோம்?' என்று சொல்லுவார்கள்.

அவர்களுக்கும் முன்புகூட எடிசன் பரம்பரையினர், 'மின்சாரத்தை கண்டுபிடித்தது நாங்கள் அல்லவா?' நாங்கள் அல்லவா அதற்குக் காரணம்?' என்று சொல்லுவார்கள்.

இப்படி இடையிடையே ஒவ்வொருவரும் தங்களுடைய பழைய நாட்களை நினைவுபடுத்திக்கொள்வதில் எந்தவிதமான நஷ்டமும் இல்லை; அந்தப் பெருமையை அவர்கள் தேடிக் கொள்ளலாம்.

ஆனால், இடையிலே அவர்கள், 'இப்பொழுது மின்சாரம் நிரம்ப இருக்கிறது என்று சொல்லலாம்; அதற்குக் காரணம், தொழில் நடைபெறாததுதான்; உங்கள் ஆட்சியில் பல தொழிற்சாலைகள் மூடப்பட்டிருக்கின்றன; அதனால்தான் மின்சாரத்தைப் பயன்படுத்த முடியவில்லை" என்று குறிப்பிட்டுச் சொன்னார்கள்.

எங்களிடம் ஆட்சி ஒப்படைக்கப்பட்ட நேரத்தில் மூடப்பட்டிருந்த பல தொழிற்சாலைகளை நாங்கள் திறந்துவைக்கின்ற ஒரு வெற்றி இருக்கிறதே தவிர, எங்களுடைய ஆட்சிக் காலத்தில் தொழிற்சாலைகள் மூடப்படவில்லை.

எங்களிடம் ஆட்சி ஒப்படைக்கப்பட்ட நேரத்தில், கோயம்பத்தூரில் பல தொழிற்சாலைகள் மூடப்பட்டிருந்தன; அவைகளிலே சிலவற்றை இன்றைய தினம் திறந்திருக்கிறோம்—சோமசுந்தர ஆலை திறக்கப்பட்டிருக்கிறது; ஜனார்த்தனா ஆலை திறக்கப்பட்டிருக்கிறது; அம்பாள் ஆலை திறக்கப்பட்டிருக்கிறது; புதுக்கோட்டையில் காவேரி மில் திறக்கப்பட்டிருக்கிறது.

அவர்கள் காலத்தில் மூடப்பட்ட டெக்ஸ்டூல் கம்பெனி, இன்றைய தினம் வேலை செய்து கொண்டிருக்கிறது. இன்னும் ஒரு வாரம்—இரண்டு வாரங்களுக்குள் ரெங்க விலாஸ், கம்போடியா மில்கள் திறப்பதற்கான வழிவகைகளைப் பற்றி ஆராய்ந்து ஆவன செய்வதாக மத்திய அமைச்சர் தினேஷ் சிங் உறுதி அளித்திருக்கிறார். இவைகளெல்லாம் திறக்கப்பட இருக்கின்றன.

'இவ்வளவு தொழிற்சாலைகள் திறக்கப்பட்டிருக்கின்றன' என்று நாங்கள் எடுத்துக்காட்டினால், 'இன்னும் சில மூடப்பட்டிருக்கின்றனவே?'—என்று கேட்பார்கள். பத்திரிகையிலே பார்க்கும்பொழுது அப்படித்தான் தோன்றும்.

செல்பார்க் கம்பெனி மூடப்பட்டிருக்கிறது என்றால், அங்கே வேலை செய்கின்ற தொழிலாளர்கள் எத்தனைப் பேர்?—60-க்கும் குறைவு. யூனியன் ஆக்ஸெஸரீஸ் மூடப்பட்டிருக்கிறது என்றால், அதோடு தொடர்பு கொண்ட தொழிலாளர்கள் எத்தனை பேர்?—80 பேர்கள் தான்.

ஆக, இப்படிப்பட்ட சிறுசிறு நிறுவனங்கள் சிறிய அளவில் இருந்தாலும், அவைகளை நடத்துகிறவர்களின் பிடிவாதம் பெரிய அளவில் இருப்பதால்தான், இந்தத் தொழிற்சாலைகள் மூடப்பட்டிருக்கின்றனவே தவிர, ஓராயிரம் பேர்கள்—இரண்டாயிரம் பேர்கள், 500—600 பேர்கள் வேலை செய்யக்கூடிய எந்தத் தொழிற்சாலையும் மூடப்பட்டிருப்பதாக எதிர்க் கட்சித் தலைவருக்குத் தகவல் கிடைத்திருப்பதாகத் தெரியவில்லை. (திரு. பி. ஜி. கருத்திருமன் :—" என் பீல்டு.")

ஒன்றை அவர் தெரிந்துகொள்ள வேண்டும்; தொழில் உலக வார்த்தைகளில், 'தொழிற்சாலை மூடப்பட்டிருக்கிறது' என்பதற்கு, 'குளோஸ்டு'—'மூடப்பட்டுவிட்டது' என்று அர்த்தம் அல்ல; 'குளோஸ்டு' என்பதற்கும், 'குளோஷர்' என்பதற்கும் வித்தியாசம் உண்டு.

'குளோஷர்' என்றால், 'தொழிற்சாலை இழுத்து மூடப்பட்டுவிட்டது; இனி நடக்கவே நடக்காது' என்று அர்த்தமன்று!

'குளோஷர்' என்றால், தகராறைத் தீர்த்துக் கொள்ளாத வரையில், 'குளோஷர்' ஆக இருக்கலாம். அந்தக் 'குளோஷரை'க்கூட, 'நியாயமானதா? நியாமற்றதா?' என்று அரசினர் கேட்டு, திறக்கலாம்.

'இந்து' பத்திரிகை அலுவலகம் கூட ஒரு மாதம்வரையில் 'குளோஷர்' செய்யப்பட்டிருந்தது; பத்திரிகை வெளிவராமலேயே இருந்தது; அது இப்பொழுது மறுபடியும் திறக்கப் பட்டுவிட்டது.

ஆகவே, 'பெரிய அளவிலே தொழிற்சாலைகள் மூடப்பட்டிருக்கின்றன' என்று மாலைப் பத்திரிகையிலே ஒரு வார்த்தை வர வேண்டும்—அதைப் படித்து மகிழவேண்டும்—என்று எதிர்க் கட்சித் தலைவர் விரும்பினால், அவ்வாறு மகிழ்ச்சியை வருவித்துக்கொள்வதில் எனக்கு ஒரு நஷ்டமும் இல்லை; ஆனால், 'உண்மை அதுவல்ல' என்பதை மட்டும் அவர் தெரிந்துகொண்டால் போதும்!

தம்முடைய நண்பர்களிடம்கூட அவர், மாலை நேரத்தில், 'ஏராளமான தொழிற்சாலைகள் மூடப்பட்டிருக்கின்றன' என்று சொல்லலாம்; 'ஆகா, அப்படியா? இவ்வளவு அக்கிரமமான இராஜ்யமா?' என்றுகூட அவர்கள் எண்ணிக்கொண்டாலும் எண்ணிக்கொள்ளட்டும்.

திரு. கே. விநாயகம் :— "புதிய தொழிற்சாலைகள் திறக்கப்பட்டிருக்கின்றனவே!"

அண்ணா :—"நம்முடைய நண்பர் எப்பொழுதும் நமக்கு உதவியாக இருப்பவர்; 'புதிய தொழிற்சாலைகள் துவக்கப்பட்டிருப்பதைச் சொல்லாமல் விட்டுவிட்டேனே' என்று அவர் கேட்கிறார்.

மிகவும் அடக்கத்தோடு பொதுக் கூட்டங்களிலும், சட்டமன்றத்திலும் சொல்லிக்கொண்டுவருகிறேன் — 'விவசாயத் துறையைத்தான் நான் முதலிடமாகக் கவனிக்கிறேன்; தொழில் துறையை அல்ல' என்று; அதைப் பார்த்தவுடனேயே, 'தொழில் துறையைக் கவனிக்கவே இல்லை' என்று எண்ணிக் கொண்டிருக்கிறார்கள்; அவர்கள் அப்படித் தவறான எண்ணம் கொள்வார்கள் என்பதும் தெரியும்.

(4-ம் பக்கம் பார்க்க)

பெரியார் பெற்ற பெருமை

— [எஸ். ஆர்.] —

அனைத்து நாட்டு அரசியலில் நீக்கமற பரவி நின்று உலகின் முன்னோடிகளில் முதலாவதாகத் திகழும் அமெரிக்காவில்கூட

நீக்ரோக்கள் --

இன்னும் சமுதாய—சட்ட உரிமைகளுக்காகத் தெரு முனைகளில் போராட்டம் நடத்துகிறார்கள்!

உயிர் துறக்கும் வரையில், தமது உயிர்க் கொள்கையாகக் கருதிவந்த காந்தியடிகளின்—

மதுவிலக்கு --

காங்கிரசின் இருபதாண்டுக்கால ஆட்சிக்குப் பின்னரும், முழு அளவில் அமுலுக்கு வரவில்லை!

விஞ்ஞானத்தில் மட்டுமல்ல—நாகரிகத்தில்கூட வியக்கத்தகுந்த வளர்ச்சியினைப் பெற்றுள்ள நாடுகள் சிலவற்றில்,

பெண்கள் --

அரசியல் உரிமைக்காகப் போராடிக்கொண்டிருக்கிறார்கள் என்பது, பலருக்கு ஆச்சரியத்தைக் கொடுக்கக்கூடியதாக இருக்கும்!

ஆனால்,

சமுதாயத்தில் புதிய கருத்துக்களைப் பரப்பிய

சாக்ரட்டிஸ்---

மக்களுக்குப் பகுத்தறிவுக் கொள்கைகளை எடுத்துச் சொல்லிய

இங்கர்சால் ---

மாதரிடையே 'சதி' முறை ஒழியக் காரணமாக இருந்த

ராஜா ராம் மோகன்ராய் ---

ஆகியவர்களைப்போல் தமிழகத்தில், தமது பொது வாழ்வு துவங்கிய காலந்தொட்டு சிந்தனையையும் செயலையும் கொட்டி—எதிர்ப்பு, ஏசல், பழி, பரிகசிப்பு வசவு, வன்முறை ஆகிய இத்துணை இடையூறுகளுக்கிடையிலும்

பெரியார் ஈ.வெ.ரா.

அவர்கள், தம் வழிநின்றவர்களின் துணையுடன் பரப்பிவந்த

சீர்திருத்தத் திருமணம்--

கழக நிர்வாகம் வந்து சுமார் எட்டே மாத கால அளவில், சட்டபூர்வமான ஒப்புதலைப் பெற்றிருக்கிறது!

தடி கொண்டு அடித்துப் பெற்ற பழத்துக்கும்—காற்றின் வேகத்தால் அசைக்கப்பட்டுத் தானாக விழுந்த கனிக்கும்—சுவையில் நிச்சயம் வேறுபாடு உண்டு.

சமுதாயத்தின் ஒரு பகுதியினரின் எதிர்ப்புக்குப் பதில் சொல்லிக்கொண்டு அமுலுக்கு வர வேண்டிய சீர்திருத்தச் சட்டங்கள் இருந்திருக்கின்றன!

சமுதாய மனப்பக்குவம் மாறியதோடு மட்டுமல்லாமல், அதற்கென வரும் ஒரு சட்டத்தை வரவேற்கும் நிலையும் காணப்பட்டு சீர்திருத்தத் திருமணம் இப்போது சட்டபூர்வமான ஒப்புதல் பெற்றிருக்கிறது!

ஆனால், 'மக்கள் ஏற்கும் பக்குவத்தினைச் சில ஆண்டுகளுக்கு முன்னரே பரவலாக எங்கும் பெற்றிருந்தபோதிலும், தனது இறுதி ஆண்டுகளின்போதாவது இச்சட்டத்தைக் காங்கிரசு ஆட்சி நிறைவேற்றியிருக்கலாமே' என, இப்போது எண்ணிப் பார்த்துக் கேள்விகள் கேட்கலாம்.

ஆனால், 'சட்டத்தின் விளைவாக நாம் அனுபவிக்கும் மகிழ்ச்சிப்பெருக்கை அது பாதிக்குமே' என்பதால், 'பழையவர்'களைப்பற்றி நினைக்காமல் இருப்பதே நல்லது!

இப்போது சட்டமன்றத்தில், மனமும் சொல்லும் இனிக்க இனிக்க இச்சட்டத்துக்கு வரவேற்புத் தந்து பாராட்டும் காங்கிரசுக்காரர்கள்—'ஆட்சியில் தங்கள் கட்சியினர் இருந்த போது—ஏன் இப்படி ஒரு முயற்சியின் செய்து பார்த்திருக்கக்கூடாது' எனக் கேட்கலாம்.

ஆனால், சுயமரியாதைத் திருமணம் பெற்றிருக்கும் பெருமையை நினைத்து உடலும் உள்ளமும் ஒருசேரப் பூரித்து மகிழும் பெரியார் அவர்களின் இதயத்தை அது துன்புறுத்துமே என்பதால், கடந்த கால ஆட்சியில் செயல்பற்றி எண்ணி சிந்தனையை வீணாக்காமல் இருப்பதே சிறந்ததாகும்!

சமுதாயம்—மதம் ஆகிய சிக்கலான கோட்பாடுகளில் ஊறித் திளைத்து நிற்கும் இந்திய வரலாற்றில், 'இதுவரையில் இல்லை' என்ற சிறப்புக்குக் காரணமாகி இருக்கும் 'சுயமரியாதைத் திருமணச் சட்டம்' இனி வரும் சமுதாயத்துக்கு ஒரு காலக் கண்ணாடியாக இருக்கப் போகிறது!

நாத்திகக் கருத்துக்கள், ஆத்திகக் கொள்கைகளுக்கு விரோதமானவையாக இருக்கலாம்!

ஆனால், ஆத்திகர்களும், 'தவறு இல்லை' என்று இப்போது ஏற்றுக்கொள்ளும்வகையில் மக்களிடையே சீர்திருத்தத் திருமணங்களுக்கான ஒரு மரியாதையை உருவாக்குவதற்காகப் பெரியார் அவர்களும், அவர் வழிவந்தவர்களும் ஏற்றுக்கொண்ட இன்னல்கள் அனைத்தும், இன்று பனிபோல் மறைகின்றன!

இந்தச் செயலுக்குக் காரணமாக இருப்பது, 'இருபதாண்டுக்கால காங்கிரசாட்சிக்குப் பின்னர் வந்த கழக நிர்வாகம்தான்' என்று தெரியும்போது, சுமார் மூன்று பத்தாண்டுகளுக்கு முன்னர் இதற்காக உழைக்க ஆரம்பித்த பெரியார் அவர்கள், ஒப்புவமையற்ற உவகை கொள்வது—அனைவரது மனக்கண் முன்னும் புலப்படாமல் போகாது!

சுமந்த இன்னல்கள் அனைத்தையும், குழந்தை பிறந்த மறுகணம் மறக்கும் தாயைப்போல், 'இதுவரையில் நடைபெற்றிருக்கும் சீர்திருத்தத் திருமணங்களும் இச்சட்டத்தினால் செல்லுபடியாகின்றன' எனபதைப் பார்க்கும்போது, இந்தத் தள்ளாத வயதில் பெரியார் அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய மனபலம் தரும் மருந்து வேறு எதுவும் இருக்கமுடியாது!

தம் கையினால் ஊன்றிய விதை, தம் கண்முன்னாலேயே கனிகள் தந்து—அவற்றைத் தமது தலைமுறையினரும் சுவைத்துப் பாராட்டும் காட்சியைவிட, எந்த ஒரு தந்தைக்கும், வேறெதுவும் சிறந்ததாக இருக்கமுடியாது.

இந்தியத் துணைக்கண்டத்துக்கே எடுத்துக்காட்டாக நிர்வாகம் புரிந்துகொண்டிருக்கும் கழக அமைச்சரவையையே அண்ணா அவர்கள், பெரியாருககுக் காணிக்கையாக்கிவிட்ட பிறகு, அதன் சாதனைகளில் ஒன்றான இச்சட்டம், அவரது சமுதாயப் பணிக்குச் சூட்டப்படும் வெற்றிப் பட்டயமாகத் திகழ இருக்கிறது!

அந்தமானில் தமிழ்ப் பள்ளி ஏற்படுத்தப்படுமா?

நாடாளுமன்றத்தில் தா. கிருஷ்ணன் கேள்வி

புதுடில்லி, நவ. 29—

"அந்தமான், நிக்கோபார் தீவுகளில் வாழும் தமிழர்களுக்கு அங்கு தமிழில் கற்பிககும் பள்ளிகள் திறக்கும் திட்டம் உண்டா? 'உண்டு' எனில், எத்தனைப் பள்ளிகள் திறக்கப்பட்டிருக்கின்றன? மேற்கொண்டு பள்ளிகளைத் திறக்கும் எண்ணம் உண்டா?"

என்று, நாடாளுமன்ற மக்களவை

(3-ம் பககம் பார்க்க)

'அவசியம்' எனக் கருதினால் ஷேக் அப்துல்லா விடுதலை செய்யப்படுவாராம்

புதுடில்லி, டிச. 1—

"ஷேக் அப்துல்லாவை விடுதலை செய்வதுபற்றி, இன்னும் எந்த முடிவும் செய்யப்படவில்லை"

என்று, உள்துறை அமைச்சர் சவாண், மக்களவையில் தெரிவித்தார்.

"அவரை விடுதலை செய்வது பற்றிய பிரச்சினை அவ்வப்போது பரிசீலனை செய்யப்படுகிறது; 'விடுதலை செய்யவேண்டியது அவசியம்' என்று அரசு கருதிவிட்டால், அந்த நிமிடத்திலேயே அவர் விடுதலை செய்யப்பட்டுவிடுவார்" என்றும் சவாண் குறிப்பிட்டார்.

தமிழகத்திலிருந்து ரூ. 50 கோடி மதிப்புக்கு வாழைப்பழ ஏற்றுமதி

"ஐரோப்பிய நாடுகளுக்கும், சோவியத் யூனியனின் ஒரு பகுதிக்கும் ஏற்றுமதியாகும் வாழைப் பழத்தின் மதிப்பு 1871-ம் ஆண்டு வாக்கில் ரூ. 3½ கோடியாகிவிடும்" என்று அரசு வர்த்தகக் கழக வட்டாரமொன்று கூறுகிறது.

அக்கழகம், 1967—68-ம் ஆண்டில் ரூ. 66 இலட்சம் மதிப்புள்ள வாழைப்பழம் ஏற்றுமதி செய்யத் திட்டமிடுகிறது. அது அண்மையில், வாழைப்பழங்களை நல்லமுறையில் வெற்றிகரமாக அயல்நாடுகளுக்கு அளித்தது.

பிற மாநிலங்களுக்கும் வழிகாட்டுகிறார் அண்ணா

பெங்களூர், நவ. 30—

இந்திரா காந்தி கலந்துகொண்ட தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களுக்கான செலவைத் தமிழ்நாடு காங்கிரசை ஏற்கும்படி செய்ய முதலமைச்சர் அண்ணா அவர்கள் அணுகியுள்ள முறையைப் பாராட்டி பெங்களூரிலிருந்து வெளியாகும் ஆங்கில நாளிதழ் 'டெக்கான் ஹெரால்டு' தலையங்கம் தீட்டியுள்ளது; அதில் கூறப்பட்டிருப்பதாவது :–

"திரு. அண்ணாதுரை எழுப்பியுள்ள இதுபோன்ற ஒரு கோரிக்கை, ஒரு மாநில அரசினால் காங்கிரசிற்கு எதிராக எழுப்பப்படுவது, இதுதான் முதல்முறை.

"தமிழக முதலமைச்சரால் பொதுமக்களின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ள இந்தக் கருத்து, இதற்கு முன்பும், பல எதிர்க் கட்சிகளால் எழுப்பப்பட்டதுண்டு; ஆனால் காங்கிரசே எல்லா மாநிலங்களிலும் ஆட்சி செய்து வந்ததால், அவைகளின் குரல் எடுபடவில்லை.

"குழந்தைப் பருவத்திலுள்ள நமது சனநாயகத்தை வளர்க்க உதவும் ஒரு சிறந்த பணி என்று கருதத்தக்கவகையில், திரு. அண்ணாதுரை அவர்களால் மேற்கொள்ளப்பட்டுள்ள இந்த நடவடிக்கை, ஏனைய காங்கிரசல்லாத அரசுகளையும் கவர்ந்து, அவைகளும் சுறுசுறுப்புடன் இதனைப் பின்பற்றும் என்று எதிர்பார்க்கலாம்."

பருப்புப் பற்றுக்குறை மூன்றாண்டில் நீங்கும்

மாவட்டக் கலெக்டர்கள் கூட்டத்தில் திட்டம்

மதுரை, நவ. 30—

பருப்பு வகைகளில் தன்னிறைவும், பாசிப் பயறு உற்பத்தியில் மிகுதி நிலையும் மூன்றாண்டுக் காலத்தில் பெறுவதற்கான திட்டங்கள் குறித்து, மதுரையில் ஏழு மாவட்ட ஆட்சியாளர்கள் கலந்துகொண்ட மாநாடு முடிவு செய்தது.

வருவாய்த்துறை உணவு ஆணையாளர் திரு. இராயப்பா இம் மாநாட்டைக் கூட்டினார்.

பாசிப் பயறு சாகுபடியின் கீழ் உள்ள நிலப்பரப்பை 1 இலட்சம் ஏக்கரிலிருந்து 6 இலட்சம் ஏக்கராக உயர்த்துவதற்கும், நல்ல ரக பருப்பு வகைகளை உற்பத்தி செய்ய வ. ஆ. மாவட்டத்தில் மாதிரிப் பண்ணை ஒன்றை ஏற்படுத்துவதற்கும் திட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது.

'சேலம் உருக்காலை அவயசிம்தானு' எனப் பரிசிலனை செய்கிறதாம் டெல்லி!

தமிழக அரசின் கோரிக்கைமீது எவ்வித முடிவும் செய்யவில்லையாம்

புதுடில்லி, டிச. 2—

"ஒரு புதிய உருக்காலை வேண்டுமா—வேண்டாமா என்பது பற்றி இந்திய அரசு இன்னும் எவ்வித முடிவுக்கும் வராததால், சேலத்தில் ஓர் இரும்பு -- உருக்கு ஆலை நிறுவத் தமிழக அரசு கோரியுள்ள லைசென்சு மனு பற்றி எவ்வித முடிவும் செய்யவில்லை"

என்று மக்களவையில், அமைச்சர் சென்னா ரெட்டி தெரிவித்துள்ளார். அதுபற்றி அவர் மேலும் கூறியிருப்பதாவது :—

"சேலத்தில் இரும்பு—உருக்கு ஆலை நிறுவத் தமிழக அரசு லைசென்சு கோரியிருக்கிறது; 2,20,000 டன் சாதாரண உருக்கும், 2,25,000 டன் கலப்பு உருக்கு ரகங்களும் உற்பத்தி செய்யும் திட்டம் அது; இதற்கு ரூ. 40 கோடி அந்நியச் செலாவணி வசதியுடன் ரூ 56 கோடி முதலீடு தேவைப்படுமென மதிப்பிடப்பட்டிருக்கிறது; 'அந்நியச் செலாவணித் தேவைக்கு ஜப்பானின் உதவி கிடைக்கும்' என மனுவில் கூறியுள்ளனர்.

"நான்காவது திட்டத்தில் புதிய உருக்காலை அவசியமா? அவசியமானல் அதற்கான நிதி வசதிகளுக்கு என்ன செய்வது?—என்பன போன்ற பிரச்சினைகள் முழுவதும் இன்னமும் பரிசிலனையில் தான் இருக்கின்றன."

நெல்லையில்

எம். ஜி. ஆர். தலைமையில் 'பொன்னியின் செல்வி'

உலகத் தமிழ் மாநாட்டுக்கு ரூ. 3 இலட்சம் கிடைத்தது

உலகத் தமிழ் மாநாட்டு நிதிக்காக அண்மையில் திருநெல்வேலி வ. உ. சி. திறந்தவெளி கலையரங்கில் நடிகை சந்திரகாந்தாவின் 'பொன்னியின் செல்வி' நாட்டிய நாடகம் நடந்தது.

அன்று மாலை நடைபெற்ற நடனத்திற்கு வசூலான ஐந்தரை இலட்சம் ரூபாயில், மூன்று இலட்சம் ரூபாயை தலைமைவகித்த புரட்சி நடிகர் திரு. எம் ஜி இராமச்சந்திரன் அவர்களிடம் மாநாட்டு நிதிக்காகக் கொடுக்கப்பட்டது.

எம். ஜி. ஆர். அவர்கள் பேசுகையில், கூறியதாவது :—

"நான் இங்கே உங்கள் முன்னிலையில் மறுபிறவி எடுத்து 11 மாதக் குழந்தையாக இருக்கிறேன். உங்கள் நல்லெண்ணமும், ஆசியும்தான் என்னை உங்கள்முன் கொண்டுவந்து நிறுத்தியிருக்கிறது. உங்களது பாராட்டுக்கும், வரவேற்புக்கும் எனது சிரம் தாழ்ந்த வணக்கம்."

"நாட்டிய நாடகத்தில், 'லைலா மஜ்னு' போன்ற வெளிநாட்டுக் காதல் கதைகள்தான் நடிக்கப்பட்டு வந்தன; ஆனால் சந்திரகாந்தா அவர்களோ, தமக்கிருக்கும் தமிழ் பற்று காரணமாக, முதலாம் நூற்றாண்டில் கரிகாற்சோழன் காலததில் வாழ்ந்த -- மறைந்துகிடந்த ஆட்டநத்தி—ஆதிமந்தியின் காதல் காவியத்தைத் தேர்ந்தெடுத்து, பாத்திரத்திற்கு உயிர் கொடுத்து, உங்கள் முன் நடித்துக் காட்டியிருக்கிறார். இது, தமிழ் காவியத்திற்கும் தமிழர்களுக்கும் செய்யும் பெருந்தொண்டாகும். அவரது எல்லா முயற்சிகளும் வெல்க என்று மனமாற உளமாற வாழ்த்துகிறேன்."

ஏற்கனவே வேலூரில் புரட்சி நடிகர் தலைமையில் நடைபெற்ற இதே நாட்டிய நாடகத்தின் மூலம் உலகத் தமிழ் மாநாட்டுக்கு ரூ. 3 இலட்சம் கிடைத்தது குறிப்பிடத்தக்கது.

சந்திரகாந்தாவிற்கு, கலெக்டர் வெள்ளியிலான பெரிய வள்ளுவர் சிலை ஒன்றைப் பரிசாகக் கொடுத்தார். —'பிலிம் நியூஸ்'

மதுரையில்

கடந்த நவ. 30-ம் நாள் மதுரை தமுக்கம் திடலில் எம். ஜி. ஆர். தலைமையில் டி. கே. எஸ். சகோதரர்களின் ஔவையார் நாடகம் நடைபெற்றது. இதன்மூலம் ரூ. 3,14,000 வசூலாயிற்று. இந்தப் பணம் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது

இதுவரை உலகத் தமிழ் மாநாட்டுக்காக ரூ. 10,64,000 எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களிடம் (மூன்று நாடகம்மூலம்) ஒப்படைக்கப்பட்டிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.



1½ டன் எடை சாமான் ஏற்றும் பார்கோ D-300

சிறிய வண்டிகளிலே பெரிது; பெரிய வண்டிகளின் உழைப்பு. சுருங்கச் சொன்னால் நடுத்தரமான நல்ல வண்டி பார்கோ D-300. அதிகச் சாமான்களை ஏற்றிச் செல்ல அடக்கமான வண்டி பார்கோ D-300. சாலைகளிலே சங்கடமில்லாமல் ஓட்டவும் போக்கு வரத்து நெரிசலைச் சுலபமாகச் சமாளிக்கவும் பொருத்தமான வண்டி பார்கோ D-300. பிக் அப்-வான், டெலிவரி வான், ஸ்டேஷன் வாகன், ஆம்புலன்ஸ் ஆகிய எந்த விதத்திலும் உபயோகிக்கலாம். நகரத்திலும் அதன் சுற்றுப்புறங்களிலும் ஆட்களையும் சாமான்களையும் குறைந்த செலவில் ஏற்றிச் செல்ல, இணையற்ற வண்டி பார்கோ D-300

சக்தி மிக்க 28.35 H.P. பெட்ரோல் என்ஜின் ● 3,112 மி.மி. (123'') WB அல்லது 3,336 மிமி (133'') WB ஆகிய இரண்டில் விருப்பமானதைத் தேர்ந்தெடுக்கலாம் ● சுலபமாகவும் விரைவிலும் ரிப்பேர் செய்ய பானெட் திறப்பு வசதி.

● (பிரிமியர் ஆட்டோமோபைல்ஸ் தயாரிப்பு)

தவணை ஏற்பாடு

சுந்தரம் பைனான்ஸ் லிமிடெட் மூலம் சுலபமான மாதத் தவணைகளில் வாங்கலாம்.





முழு விவரங்களுக்கு அன்பு கூர்ந்து அணுகுக:

டி. வி. சுந்தரம் அய்யங்கார் & சன்ஸ் பிரைவேட் லிமிடெட் மதுரை - திருச்சி - திருநெல்வேலி - புதுக்கோட்டை - சேலம் - கோயமுத்தூர் - திருவனந்தபுரம். சப் டீலர்கள்: P. N. கிருஷ்ண அய்யர் & ஸன்ஸ் பிரைவேட் லிமிடெட், திருச்சூர் - C. C. ஆட்டோமோபைல்ஸ் லிமிடெட், கள்ளிக்கோட்டை - தி குயிலோன் ஆட்டோமோபைல்ஸ் லிமிடெட், கொல்லம் - மனோரஞ்சன் காங்கூலி & ஸன்ஸ் பிரைவேட் லிமிடெட், புதுச்சேரி.

சுந்தரம் மோட்டார்ஸ் பிரைவேட் லிமிடெட் மதராஸ் - பங்களூர் - செகந்திராபாத் (A.P.) சப்டீலர்கள்; காரபதி காராஜ் 1959, விஜயவாடா - ஸ்ரீ பட்டாபிராம் கமர்ஷியல் சிண்டிகேட், காக்கிநாடா, விசாகப்பட்டினம் - D. S. ஆட்டோமோபைல்ஸ், நெல்லூர் - தி மோட்டார் சேல்ஸ் கம்பெனி, அனந்தப்பூர், கர்நூல் - T. N. ரகுநாத ரெட்டி, கடப்பை - ஸ்ரீ வெங்கடேஸ்வரா ஆட்டோமோபைல்ஸ், ஹோஸ்பேட் - P. V. பய் & கம்பெனி மங்களூர், மெர்க்காரா

sl-4272

புதிய வரி போடாமலேயே நிதி வசதியைப் பெறும் வழி

டில்லிக்கு அண்ணாவின் அரிய யோசனைகள்

திட்டக் குழுவும் பரிசீலிக்க முன்வருகிறது

வண்ணைக் கூட்டத்தில் அண்ணா தகவல்

சென்னை, டிச. 4—

"தொழிற்சாலைகள் பலவற்றில் மத்திய அரசு போட்டிருக்கின்ற பணத்திற்குத் தகுந்த பலன் நமக்கு வரவேண்டும். இதுவரையில் இந்தியத் துணைக்கண்ட அரசு, ரூ. 2,000 கோடியளவில் பல தொழிற்சாலைகளில் முதலீடு செய்திருக்கிறது; இந்தப் பணம் அனைத்தும் நமது வரிப் பணத்திலிருந்து தரப்பட்டதாகும்.

"இந்தப் பணத்திலிருந்து நடத்தப்படும் தொழிலில் இலாபம் எவ்வளவு கிடைக்கின்றது? 'இதிலிருந்து கிடைக்கின்ற இலாபம், வட்டிக்குக்கூடக் கட்டுப்படியாகவில்லை; வரவேண்டிய அளவுக்கு இலாபம் வந்தால், நாட்டு மக்கள்மீது இவ்வளவு வரி போடவேண்டிய அவசியமே இருந்திருக்காது' என தேசிய வளர்ச்சித் திட்டக் குழுக் கூட்டத்தில் விளக்கி எடுத்துரைத்தேன்"

என்று, முதலமைச்சர் அண்ணா அவர்கள், வண்ணை – சோலையப்பன் தெருவில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

அறிஞர் அண்ணா, உணவமைச்சர் திரு. மதியழகன், முரசொலி மாறன் ஆகியோருக்கு வரவேற்பு அளிக்கும் பொருட்டு வண்ணைப் பகுதி தி. மு. க. சார்பில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த மாபெரும் பொதுக்கூட்டம், சோலையப்பன் தெருவில் நேற்று மாலை நடைபெற்றது.

தோழர் கே. எம். கண்ணபிரான் கூட்டத்துக்குத் தலைமை வகித்தார்.

சட்டமன்ற உறுப்பினர்கள் மு. வேதாசலம், கா. வேழவேந்தன், சுதந்தராக் கட்சியைச் சேர்ந்த திரு. வீரஜின்னு (செட்டியார்) ஆகியோரும் பேசினர்.

அண்ணா அவர்கள் தொடர்ந்து பேசுகையில், திட்டக் குழுவினருக்குத் தாம் தெரிவித்த யோசனைகளைப் பற்றி மேலும் விளக்கினார்:—

"அதேபோல், இராணுவத்துக்காக இந்திய அரசு செலவிடும் தொகையையும் குறைத்துக்கொண்டே தீரவேண்டும்; நாட்டுக்கு ஆபத்து வரக்கூடாத அளவுக்குப் பாதுகாப்புத் துறையை வைத்துக்கொண்டு, பாதுகாப்புச் செலவில் ரூ. 100 கோடியைக் குறைக்க வேண்டும்; இதுபற்றி நான் பல நிபுணர்களிடம் கலந்து பேசிய பிறகுதான் கூறுகிறேன். தாக்கும் திறமையைக் குறைத்துக்கொள்ளாமல்—வெறும் இயந்திரத்தை மட்டும் நம்பாமல் மக்களிடத்தில் நம்பிக்கை வைத்துச் சிக்கனத்தைக் கையாள வேண்டும்.

பாதுகாப்புத் தேவை என்றால் 18 முதல் 40 வயது வரையுள்ள ஒவ்வொருவருக்கும் போர் முனைப் பயிற்சி கொடுக்கலாம். தேவையான நேரத்தில் ஆயுதம் தாங்கி எல்லைக்குப் போகச் சொன்னால் போவார்கள். இங்கே அந்தக் காரியத்தை ஏற்று நடத்த நான் தயாராக இருக்கிறேன்.

வருமான வரி வசூலில் கோடிக்கணக்கான ரூபாய் வசூலாகாமல் இருக்கிறது. இதைச் சரியாக வசூலித்து ஐந்தாண்டுத் திட்டத்துக்கு வேண்டிய நிதி வசதியைப் பெருக்கவேண்டும்.

இந்த மூன்று யோசனைகளையும் நான் திட்டக் குழுவிடத்திலே சொன்னேன்.

"ஐந்தாண்டுத் திட்டத்திற்கு நிதி வசதி திரட்டுவதற்காக வரி போடவேண்டும்" என்று தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் திட்டக் குழுத் தலைவர் கூறிய யோசனையை, 'பரிசீலிக்கக்கூட நான் விரும்பவில்லை' என்று கூறிவிட்டு, வரி போடாமலே நிதி வசதியைத் திரட்ட மேற்சொன்ன மூன்று யோசனைகளையும் தெரிவித்தேன்.

நான் பேசி முடித்தபின் திட்டக் குழு உறுப்பினர் திரு. ஆர். வெங்கட்ராமன் என்னிடம் வந்து, 'நீங்கள் கூறிய இந்த மூன்று யோசனைகளையும் ஏற்று பரிசீலிக்கத் திட்டக் குழு ஒப்புக்கொண்டுள்ளது' என்று கூறினார்.

சுப்பிரமணியம் தமிழ்நாடு காங்கிரசுத் தலைவரானால்...!

அறிஞர் அண்ணாவின் கருத்து

"திரு. சி. சுப்பிரமணியம் தமிழ்நாடு காங்கிரசுத் தலைவராக வரக்கூடும் என்ற செய்தியைப் பார்த்தேன்; அவர் தலைவராக வந்த பிறகாவது மக்கள் எப்படியெல்லாம் மனம் மாறியிருக்கிறார்கள் என்பதை உணரவேண்டும்.

"ஏனென்றால், காங்கிரசுக் கட்சி அடியோடு அழிந்துவிடுவதை நான் விரும்பவில்லை. அவர்கள் நல்ல எதிர்க் கட்சியாக இருந்து நாங்கள் தவறு செய்தால் கண்டிக்க வேண்டும்; தடுமாற்றம் அடைந்தால் உறுதி கொடுக்க வேண்டும்.

"உண்மையான சனநாயகத்தில் ஆளும் கட்சியும் — எதிர்க் கட்சியும் சம எடையில் இருக்க வேண்டும்; சற்று ஏமாந்தால், 'மக்கள் நம்மை வீட்டுக்கு அனுப்பிவிட்டு அவர்களைக் கொண்டுவந்துவிடுவார்கள்' என்ற அச்சம் இருந்தால் தான் சனநாயகம் வெற்றி பெறும்.

"ஆகவே, 'காங்கிரசு தனது பலவீனத்தைத் திருத்திக் கொண்டு, பலமுள்ள கட்சியாக வரவேண்டும்' என்று விரும்புகிறேன்.

"நாக்கில் நரம்பின்றித் தாறுமாறாகப் பேசுவதை நிறுத்திக் கொண்டு, நல்ல கருத்துத் தெளிவோடு தமது கட்சியை திரு. சுப்பிரமணியம் நடத்திச்செல்ல வேண்டும் என்று நான் விரும்புகிறேன்."

(வண்ணைப் பொதுக்கூட்டத்தில்)

அந்தமானில் தமிழர் பள்ளி

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

யில் திரு. தா. கிருஷ்ணன் கேட்டார்.

இதற்கு கல்வித்துறைத் துணையமைச்சர் திரு. பகவத் ஜா பதிலளித்ததாவது:—

"இது தொடர்பாகத் தகவல்கள் சேகரித்து அனுப்பும்படி அந்தமான்—நிக்கோபார் நிர்வாகத்திடம் கேட்கப்பட்டிருக்கிறது; கிடைத்தவுடன் அவையில் விவர அறிக்கை வைக்கப்படும்."

எதிர்க் கட்சியினருக்கு அண்ணா பதில்

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

ஆனால், தொழில்துறையில் புதிய தொழில் துவக்குவதை நான் தடுக்கவும் இல்லை—உற்சாகப் படுத்தாமலும் இல்லை.

அம்பத்தூரில் இரண்டு மாதங்களுக்கு முன்பு, டாடா கம்பெனியைச் சேர்ந்த பெண்டிசைட்ஸ் கம்பெனி துவக்கப்பட்டிருக்கிறது.

மேட்டூரில் 3—4 மாதங்களுக்கு முன்னால் புதிதாக பிளாஸ்டிக் தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

தொழில் அமைச்சராக இருந்த வெங்கட்ராமன், மேட்டுப்பாளையத்தில் வாட்டில் தொழிற்சாலையைத் துவக்கிவைத்துள்ளார்.

அம்பத்தூரில் இன்னொரு தொழிற்சாலையில் விரிவுபடுத்தப்பட்ட ஒரு பகுதியை நான் திறந்துவைத்துவிட்டு வந்தேன்.

இவைகளெல்லாம் மட்டுமல்லாமல், 6-க்கும் குறையாத—கூட்டுறவு முறையில் நடத்தப்படுகிற டீ கம்பெனித் தொழிற்சாலைகள் நீலகிரி வட்டத்தில் திறக்கப்பட்டிருக்கிறது.

ஆக, 'தொழில் வளர்ச்சி இல்லை' என்று சொல்லுவதும் தவறு; 'இருந்த தொழிற்சாலைகளெல்லாம் மூடப்பட்டுவிட்டன' என்று கூறுவதும் தவறு.

'தொழில் அமைதிக் குறைவு இருக்கிறது' என்று சொன்னார்கள்; அதை நான் ஒத்துக்கொள்கிறேன்; 'நாம் வந்துகூட அமைதிக் குறைவு ஏற்பட்டுவிட்டதே—நாம் அமைதியை விரும்புகின்றவர்களாயிற்றே — நம்முடைய ஆட்சியிலா இப்படி ஏற்படவேண்டும்?' என்று யோசித்துப் பார்த்தேன்; இரண்டு—மூன்று ஆண்டுகளின் பட்டியல்களைப் பார்த்தேன்; எந்த ஆண்டுப் பட்டியலும் இந்த ஆண்டுப் பட்டியலைவிடக் குறைவாக இல்லை; அதாவது தீபாவளி சமயத்தில் போனசு தகராறு வருகிறது!

தீபாவளி சமயத்தில் பட்டாசு வெடிச் சத்தம் எப்படி நிச்சயம் காதில் விழுமோ, அப்படி—தொழிலாளர்களின் கோரிக்கையும் விழத்தான் செய்யும்; ஓர் இடத்தில் நடந்தது — 'இந்து' பத்திரிகை அலுவலகத்தில் நடந்தது; இப்பொழுது நடந்தது மட்டுமல்ல; கடந்த ஆண்டில் இதே மாதத்தில்—இதே தீபாவளி நேரத்தில்—போனஸ் தகராறு குறித்து அந்தத் தொழிற்சாலை—அந்தப் பத்திரிகை அலுவலகம் மூடப்பட்டது; அதற்கும் இதற்கும் என்ன வேறுபாடு என்றால், இப்பொழுது கிட்டத்தட்ட நாற்பது நாட்களுக்கு மூடப்பட்டிருந்தது; இருந்தாலும், எந்தவிதமான அமளியும் இல்லை.

போன ஆண்டில்—'தர்ம ராஜ்தில்' அந்தத் தொழிற்சாலை மூடப்பட்டிருந்த நேரத்தில், மூன்றாவது நாளன்று அங்கே இருந்த கண்ணாடி சன்னல்கள் உடைக்கப்பட்டன.........

திரு. கே. விநாயகம்:—"மானேஜர் தாக்கப்பட்டார்"

அண்ணா:—"திரு. விநாயகம் அவர்கள் சொல்வது உண்மை; ஆனால், அப்பொழுது என்ன பேசிக்கொள்ளப்பட்டது என்றால், 'அரசினர் சம்பந்தப்பட்ட யாரோ ஒரு பெரியவருடைய அனுசரணையோடு அந்தத் தொழிலாளர்கள் அப்படி நடந்தார்கள்' என்று; அந்தப் பகுதியை அவர்கள் மறுப்பார்கள்—அது எனக்குத் தெரியும். அந்தப் பகுதி அவர்களை பாதிக்கின்ற பகுதி என்பதால் அதை அவர்கள் மறுக்கிறார்கள்!

ஆனால் இப்பொழுது, அமைதியான முறையிலே அந்தத் தகராறு தீர்க்கப்பட்டுவிட்டது என்பதை எதிர்க் கட்சித் தலைவருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

'தொழில் அமைப்புகளுக்கு இப்பொழுது போடப்படும் மின்சாரக் கட்டணம் மிகக் குறைவாக இருக்கிறது; அதை அதிகப்படுத்த வேண்டும்' என்று உறுப்பினர்கள் குறிப்பிட்ட சிறந்த யோசனைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, அந்த முறையில் மின்சாரக் கட்டணத்தை உயர்த்த தக்க நேரத்தில் இந்த யோசனையைப் பயன்படுத்திக் கொள்ள உங்கள் அனுமதி கிடைக்கும் என்று நம்பி, என் உரையை முடிக்கிறேன்."

'ஆட்சி மொழியாக இந்தி மொழியை ஏற்கமாட்டோம்'

'அரசியல் சட்டத்தைத் திருத்துவதே எங்களுக்கு மனநிறைவூட்டும்'

புதுடில்லி செய்தியாளரிடை அண்ணா கருத்துரை

புதுடில்லி, டிச. 2—

"தற்போது நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டுள்ள ஆட்சிமொழித் திருத்த மசோதா, எங்களுக்கு முழு மனநிறைவளிக்கக்கூடியதல்ல"

என்று தமிழக முதலமைச்சர் அண்ணா அவர்கள், இங்கு செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

"நேருவின் உறுதிமொழி தக்க முறையில் இந்த மசோதாவில் இடம் பெறுவதாக நாங்கள் கருதவில்லை; அரசியல் சட்டத்துக்கு அரசினர் திருத்தம் கொண்டுவந்திருந்தால் மகிழ்ச்சியடைந்திருப்போம்; தற்போதைய மசோதா எதிர்பார்த்ததைவிடக் குறைபாடுடையதாகவேயுள்ளது"

என்றார் அண்ணா.

மேலும் செய்தியாளர்களிடம் அண்ணா கருத்தறிவிக்கையில் கூறியதாவது:—

"இந்த மசோதாவுக்குப் பல திருத்தங்களை தி.மு.க. உறுப்பினர்கள் கொண்டுவருவார்கள்; 'இந்தி பேசாத மக்களுக்கு நேரு அளித்த உறுதிமொழியை இடம் பெறச் செய்ய அரசியல் சட்டத்தையே திருத்தவேண்டும்;' என்ற திருத்தம் கொண்டுவரப்படும்.

"'மே' என்றிருக்கும் இடத்தில் 'ஷெல்' என்ற பதத்தைப் போட மற்றொரு திருத்தம் வற்புறுத்தும்.

"இந்தியை இந்தியாவின் ஆட்சிமொழியாகத் தாங்கள் ஒப்புக்கொள்வதாக, கருநாடகம்—ஆந்திர முதலமைச்சர்கள், காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் தெரிவித்திருப்பது குறித்து நான் வியப்படையவில்லை; எங்களுக்கென்று ஒரு கொள்கை உண்டு; எனவே, நானும் அதை ஏற்றுக்கொள்வேன் என்று அவர்கள் எதிர்பார்க்க முடியாது!"

கருநாடகத்தில் மாணவர் இந்தி எதிர்ப்பு!

கருநாடக மாநிலத்தில் தாவணகெரேயிலுள்ள நடுநிலை — உயர்நிலைப் பள்ளி மாணவர்கள், இந்தியைக் கட்டாய பாடமாக்கியுள்ளதை எதிர்த்து வகுப்புகளிலிருந்து வெளியேறி வந்து ஊர்வலம் நடத்தினார்கள்.

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

தமிழகத்தில் ஒரு சிறந்த எதிர்க் கட்சித் தலைவராக இருந்து காட்டலாம்!

இந்த வகையில், நேரு—சாஸ்திரி—கோவிந்த வல்லப பந்த்—சர்தார் வல்லபாய் பட்டேல் போன்ற தலைவர்களுக்குக் கிடைக்காத வாய்ப்பு, அனைத்திந்தியத் தலைவர்களின் பட்டியலில் இடம் பெற்றிருக்கும் காமராசருக்குத் தமிழகத்தில் கிடைத்திருக்கிறது!

காமராசர் இதனை எந்த அளவுக்குப் பயன்படுத்திக் கொள்கிறார்—பயனுள்ளதாக்குகிறார் என்பதனை, இனிவரும் நாட்கள் உணர்த்தட்டும்!

—எஸ். ஆர்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.)